# 06-04-2023 செய்தி

## இந்தியா-பூடான் உறவு

**சிலிகுரி கணவாய்**

- அக்டோபர் 2021-இல், பூடானும் சீனாவும் எல்லை பிரச்சனைக்குத் தீர்வு காண மூன்றடுக்குத் திட்டம் ஒன்றை ஏற்றுக்கொண்டன.
- பூடானின் வடக்குப் பகுதி, மேற்குப் பகுதி, டோக்லாம் பகுதி ஆகியவைதான் இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லைப் பிரச்சனைகள்.




- 2017-இல் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே டோக்லாமில் ஏற்பட்ட பதற்றம் குறிப்பிடத்தக்கது.
- அதனால் சீனாவுடனான பேச்சுவார்த்தையில் டோக்லாமை பூடான் விட்டுக்கொடுக்கும் எந்தவித சமரசம் ஏற்படுவதையும் இந்தியா விரும்பாது; ஏற்றுக்கொள்ளாது.
- ஜிப்மோச்சி சிகரம், ஜாம்ஃபெரி பள்ளத்தாக்குப் பகுதிகளில் சட்டவிரோதமாக சாலைகள் அமைப்பதும், ஊடுருவ முற்படுவதுமான சீனாவின் முயற்சிகளை டோக்லாம் பதற்றத்தின்போது இந்தியா தடுத்து நிறுத்தியது.
- ஜாம்ஃபெரி பகுதியில் நுழைவதன் மூலம் இந்தியாவின் சிலிகுரி கணவாய் பகுதியில் நேரடியாக நோட்டமிடவும், தேவைப்பட்டால் ஆக்கிரமிக்கவும் முடியும் என்பது சீனாவின் ரகசிய எண்ணம்.
- சிலிகுரி கணவாய் என்பது இந்தியாவையும் வடகிழக்கு மாநிலங்களையும் இணைக்கும் 20 கி.மீ மட்டுமே நீளமுள்ள 'கோழிக் கழுத்து' என்று அழைக்கப்படும் பகுதி.
- அதை கைப்பற்றுவதன் மூலம் வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவிலிருந்து முற்றிலுமாக துண்டித்து தன்னுடன் இணைத்துக் கொள்ள முடியும் என்பது சீனாவின் நீண்டநாள் கனவு.

**சீனாவின் திட்டம்**

- பூடான், இந்தியா, சீனா ஆகிய முத்தரப்பினரும் அமர்ந்து டோக்லாம் முச்சந்தி பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்.
- கடந்த சில ஆண்டுகளாகவே பூடானுடன் ராஜாங்க உறவை ஏற்படுத்திக் கொள்வதில் முனைப்புக் காட்டுகிறது சீனா. ராணுவ ரீதியாகவும், ராஜாங்க ரீதியாகவும், ராஜதந்திர ரீதியாகவும் இந்தியாவுடன் நெருக்கமாக இருக்கும் பூடானை தன்வசம் ஈர்ப்பதற்கு பல வளர்ச்சித் திட்டங்களை சீனா அறிவித்திருக்கிறது.

**இந்தியா உதவி**

- சீனாவைப் போல பூடானுக்கு பொருளாதார உதவிகளை இந்தியாவால் வாரி வழங்கிவிட முடியாது. ஆனால் பூடானின் ஐந்தாண்டு திட்டங்கள் பெரும்பாலும் இந்தியாவின் உதவியுடன்தான் நடைபெறுகின்றன.
- இப்போதைய 12-ஆவது ஐந்தாண்டு திட்டத்துக்கு இந்தியா ரூ.4,500 கோடி வழங்கியிருக்கிறது.
- பூடானின் நீர்மின் நிலையத் திட்டங்களுக்கும், எரிசக்தி திட்டங்களுக்கும் இந்தியாவின் பங்களிப்பு ஏராளம்.
- அதேபோல, கல்வித் துறையிலும் பூடான் இந்தியாவை நம்பித்தான் இருக்கிறது. பூடானில் உள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் இந்தியர்கள்.

## போக்சோ




- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரிக்க, அனைத்து மாவட்டங்களிலும், சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.
- குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், போக்சோ சட்டத்தின்கீழ் வருகின்றன. அந்த வழக்குகளை ஆறு மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டும்.
- மேல்முறையீடு அடுத்த 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.
- தமிழகத்தில் 16 மாவட்டங்களில் மட்டும், போக்சோ நீதிமன்றங்கள் உள்ளன.

## அடாவடியின் மறுஉருவம்தான் சீனாவா?

**ஸாங்க்னான்**

- அருணாச்சலப் பிரதேசத்தின் 90,000 சதுர கி.மீ பரப்பளவைச் சொந்தம் கொண்டாடிவரும் சீனா, அதை 'ஸாங்க்னான்' என அழைக்கிறது.
- திபெத் தன்னாட்சி பிராந்தியத்தின் தெற்குப் பகுதியாக சீனாவின் வரைபடத்திலும் இப்பகுதி குறிக்கப்பட்டிருக்கிறது.
- 'தரப்படுத்தப்பட்ட பெயர்கள்' எனும் பெயரில் இப்படியாக பெயர் சூட்டுதலை ஏற்கெனவே இரண்டு முறை சீனா நிகழ்த்தியிருக்கிறது.
- 2017இல் அருணாச்சலப் பிரதேசத்துக்கு தலாய் லாமா சென்றதால் ஆத்திரமடைந்த சீனா, அங்கு உள்ள ஆறு இடங்களுக்குத் தன்னிச்சையாகப் பெயர் சூட்டியது.
- 2021-இல் அருணச்சலப் பிரதேசத்தின் 15 இடங்களுக்கான பெயர்ப் பட்டியலை வெளியிட்டது.

**மெக்மகோன் எல்லைக்கோடு**

- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வரையறுக்கப்பட்ட மெக்மகோன் எல்லைக் கோட்டை ஏற்க சீனா மறுத்து விட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா எப்போதும் சீனாவுடன் இணக்கமான போக்கையே நாடி வந்திருக்கிறது.
- சீனாவோ, ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது, வெளியே நட்பு பாராட்டுவதாகக் காண்பித்துக் கொண்டு முதுகில் குத்துவது, அடுத்தவர் நிலத்துக்கு ஆசைப்பட்டு ஆக்கிரமிப்பது, திருட்டுத்தனமாக நிலத்தை அபகரிப்பது உள்ளிட்ட விவகாரங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.
- இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட்கள் இதுபோன்ற செயல்களைக் கண்டிக்காமல் அமைதி காப்பதும் அவ்வப்போது சீனாவுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருப்பதும் கேலிக்கூத்தான விஷயம்.

## 12 பொருள்களுக்கு புவிசார் குறியீடு

- நிகழாண்டில் (2022-23) வெளிநாட்டு பொருள்கள் உள்பட 12 பொருள்களை புவிசார் குறியீடு அங்கீகாரத்துக்கு மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.
- இதில் கேரள மாநிலம் முதலிடத்தில் வகிக்கிறது என்பது புவிசார் குறியீடு பதிவு விவரங்கள் மூலமாக தெரியவந்துள்ளது.

**கேரளம்**

- கேரளத்திலிருந்து பீன்ஸ் (அட்டப்பாடி ஆட்டுக்கொம்பு அவரை), எள்ளு (ஓணாட்டு கரா எள்ளு), பூண்டு (கந்தலூர் வட்டவட பூண்டு), முலாம்பழம் (கொடுங்கல்லூர் பட்டு வெள்ளரி), ஆகிய 6 பொருள்கள் புவிசார் குறியீடு அங்கீகாரத்துக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- பீகாரைச் சேர்ந்த நீரில் வளரும் பருப்பு வகை (மிதிலா மக்னா), மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த அலிபாக் வெள்ளை வெங்காயம், தெலங்கானாவின் சிவப்பு துவரம் பருப்பு, லடாக்கின் ஆப்ரிகாட் பழம், அஸ்ஸாமின் கைத்தறி துண்டு (கமோஸா).
- ஸ்பெயினின் 'பிராண்டி டி செர்ஸ்' என்ற மதுபானம், இத்தாலியின் பாலாடைக்காட்டி (சீஸ்) உள்ளிட்ட 2 வெளிநாட்டு பொருட்களும் நிகழாண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**புவிசார் குறியீடு**

- ஓரிடத்தில் விளையக்கூடிய பொருள்கள் அல்லது தயாரிக்கக்கூடிய பொருள்களின் தரம், அந்த இடத்தின் காலநிலை, தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் புவிசார் குறியீடு நிர்ணயிக்கப்படுகின்றது.
- இதற்கென, புவிசார் குறியீடு மற்றும் பாதுகாப்பு சட்டத்தை மத்திய அரசு கடந்த 1999-ஆம் ஆண்டு அறிமுகம் செய்து, 2003-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

## கேரளாவின் மீடியா ஒன் செய்தி சேனல் மீதான தடை ரத்து

- கேரளாவின் மீடியா ஒன் செய்திச் சேனலுக்கு மத்திய அரசு விதித்த தடையை உச்சநீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது.
- தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் பொதுமக்களின் உரிமைகளுக்கு தடை போடக்கூடாது என்று மத்திய அரசை நீதிபதிகள் கடுமையாக விமர்சித்தனர்.

**பத்திரிக்கை சுதந்திரம் அவசியம்**

- அரசின் கொள்கைகள் மிகவும் செயல்பாடுகள் குறித்து மீடியா ஒன் சேனல் விமர்சித்ததை தேச விரோதம் என்று கருதிவிட முடியாது.
- துடிப்பான ஜனநாயகத்துக்கு பத்திரிகை சுதந்திரம் என்பது மிகவும் அவசியமான ஒன்று.
- தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி மக்களின் உரிமைகளை மறுக்க முடியாது.

**நியாயமான காரணம் இல்லை**

- அரசு நடவடிக்கைகளை பத்திரிகைகள் ஆதரிக்க வேண்டும் என்ற ஆளும் அரசின் நிலைப்பாட்டை அனுமதிக்க முடியாது. அரசாங்கத்தை விமர்சித்து மட்டுமே ஒரு தொலைக்காட்சி சேனலின் உரிமத்தை ரத்து செய்வதற்கான காரணமாக இருக்க முடியாது.

**வெளிப்படை தன்மை தேவை**

- நீதிமன்ற விசாரணையில் எதிர்தரப்பினருக்கு தகவல்களை வெளியிடுவதில் அரசு மூடிமறைத்து செயல்பட இதனை கருவியாக பயன்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.
- அனைத்து விசாரணை அறிக்கைகளையும் ரகசியம் என்று கூறி புறந்தள்ள முடியாது. ஏனெனில், அவை குடிமக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதிக்கின்றன.